www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS   Crl. Misc.39

(Chapter XXIII Code of Criminal Procedure)

*****

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
ADDITIONAL MAHILA COURT, MADURAI

| | | |
|---|---|---|
| Calendar | : | C.C.63/2014 |
| Deposition of Witness for | : | PW.3 |
| Name | : | Rani |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of December 2021.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை பைபாஸ்ரோடு, நந்தினி தெரு, வேல்முருகன் நகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். அ.சா.2 எனது கணவர். சுஜய் கார்த்திக் அ.சா.1ன் கணவர். மகாலெட்சுமி சுஜய் கார்த்திக்கின் அம்மா, பிரதிப் சுஜய் கார்த்திக்கின் சகோதரர். சங்கீதா பிரதீப்பின் மனைவி ஆவார். எனது மகளுக்கும், சுஜய் கார்த்திக்குக்கும் திருப்பதியில் வைத்து 2012ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்து சென்னைக்கு வந்தோம். திருமணத்தின்போது எனது மகளுக்கு 150 பவுன் நகைகள், மற்றும் 12 கிலோ வெள்ளிபொருட்களும், மாப்பிள்ளைக்கு 7 பவுன் கைசெயினும், திருமண செலவுக்காக திருமலை சாமி செட்டியார் மற்றும் பாலசுப்பிரமணியன் என்பவர்கள் மூலமாக ரூபாய் 9 இலட்சம் கொடுத்திருந்தோம். திருமணத்திற்கு பிறகு ரூபாய் 10 இலட்சம் மதிப்புள்ள எட்டியாஸ் கார் வாங்குவதற்கு பணம் ரூபாய் 10 இலட்சம் வங்கி மூலமாக கொடுத்தோம். பெங்களூரில் வாடகை மற்றும் வீட்டு செலவுக்காக மொத்தம் ரூபாய் 15,90,000/- கொடுத்தோம். அதில் காருக்கான பத்து இலட்சம் ரூபாயும் அடங்கும். பெங்களூரில் இருந்தபோது வீட்டு செலவுக்காக மாதம் மாதம் என் கணவர் பணம் அனுப்புவார்.

**(முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNMD070027652014-orderno-3.pdf